**அக்டோபர் – 17**

# TNPSC துளிகள்

- இந்த ஆண்டின் இறுதிக்குள் நெட்ஃபிக்ஸ் மற்றும் ஹாட் ஸ்டார் போன்ற முன்னணியில் உள்ள நேரடி காணொளி ஒளிபரப்புத் தளங்கள் ஆகியவற்றில் ஒளிபரப்பக் கூடாத காணொளிகளின் "எதிர்மறைப்" பட்டியலைத் மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சகம் வெளியிட இருக்கின்றது.
    - புதிய ஒளிபரப்புச் சேவைகள் ஆணையத்தின் வரிசையில் ஒரு சுய ஒழுங்குமுறை அமைப்பைக் கொண்டு வர மத்திய அமைச்சகம் அந்த நிறுவனங்களை அறிவுறுத்தியுள்ளது.
- 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை பாகிஸ்தானைத் தனது ‘சாம்பல் நிறப் பட்டியலில்’ வைக்க நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழு (Financial Action Task Force - FATF) முடிவு செய்துள்ளது. பயங்கரவாதத்திற்கு நிதி அளித்தல் மற்றும் பண மோசடிகளை முற்றிலுமாக அகற்ற கூடுதல் நடவடிக்கைகளை எடுக்குமாறு இஸ்லாமாபாத்தை இந்தக் குழு அறிவுறுத்தியுள்ளது.
- கர்நாடக மாநில அரசால் அம்மாநில ஜனபதா நிறுவனத்தின் (Karnataka Janapada Academy - KJA) தலைவராக நியமிக்கப்பட்ட முதலாவது திருநங்கை ஜோகதி மஞ்சம்மா ஆவார். அவருடைய வயது 62 ஆகும்.
    - கன்னட நாட்டுப்புறவியலின் பாதுகாப்புக் கலைஞர்களின் நலன் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றிற்காக KJA செயல்படுகின்றது.
- “சக்கரங்கள் மீதான விளம்பரம்" என்ற ஒரு புதிய திட்டத்தின் கீழ் விளம்பர நடவடிக்கைகளுக்காக ரயில்களைப் பயன்படுத்த அனுமதிப்பதற்கு ரயில்வே துறை முடிவு செய்துள்ளது.
    - சிறப்பு ரயில்கள் இந்த விளம்பரத்திற்காகப் பயன்படுத்தப்பட இருக்கின்றன. பாலிவுட் திரைப்படமான “ஹவுஸ்ஃபுல் 4” குழுவானது இந்த வசதியை முதலில் பயன்படுத்திய ஒன்றாக மாறியது.
- கார்கில் மாவட்டத்தின் லடாக்கில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க புத்த மடத்தைப் “பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னம்” என்று அறிவிக்க இந்திய தொல்பொருள் ஆய்வு நிறுவனமானது பொது மக்களிடமிருந்து கருத்துகளைக் கோரியுள்ளது.
- கையெழுத்திடப்பட்ட ஒரு இரகசிய ஒப்பந்தத்தின் கீழ், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டுள்ள, பெய்ஜிங்கில் செயல்படும் ஒரு நிறுவனமானது தென் பசிபிக் பிராந்தியத்தில் உள்ள சாலமன் தீவுகளின் ஒரு பகுதியான துலாகித் தீவை 75 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு எடுத்துள்ளது.
    - உத்தி சார்ந்த முக்கியத்துவம் வாய்ந்த துலாகித் தீவானது ஏற்கனவே பிரிட்டன் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் இராணுவத் தலைமையகமாகச் செயல்பட்டு இருந்தது.

# தமிழ்நாடு செய்திகள்

## நான்காவது காவல் துறை ஆணையம் - எம் ஷீலா பிரியா

- நான்காவது காவல் துறை ஆணையம் அமைக்கப்படுவதாக தமிழ்நாடு மாநில அரசு அறிவித்துள்ளது.
- ஓய்வு பெற்ற அதிகாரியான எம் ஷீலா பிரியா இந்த ஆணையத்தின் தலைவராக

நியமிக்கப் பட்டுள்ளார்.

***உறுப்பினர்கள்***

- ❖ வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினரான வி பி பி பரமசிவம், தமிழ்நாடு அரசின் ஓய்வு பெற்ற இணைச் செயலாளர் எம் அறச்செல்வி ஆகியோர் இந்த ஆணையத்தின் உறுப்பினர்கள் ஆவர்.

***உறுப்பினர் செயலாளர்***


- ❖ இணைய வழிக் குற்றப் பிரிவு காவல் துறையின் கூடுதல் தலைமை இயக்குனரான ஜி. வெங்கட்ராமன்.

***பணி***

- ❖ ஷீலா பிரியா ஆணையமானது பின்வருபவை குறித்து ஆராய இருக்கின்றது.
  - ○ நுண்ணறிவுத் தகவல் சேகரிப்பு
  - ○ பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள்
  - ○ இணைய வழிக் குற்றங்கள், போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு
  - ○ மூன்றாவது ஆணையத்தின் பரிந்துரைகள் குறித்து இந்த ஆணையம் ஆராயும்.

***காவல் துறை ஆணையத்தின் வரலாறு***

- ❖ இதற்கு முன்னர் 1969, 1989, 2006 ஆம் ஆண்டுகளில் மூன்று காவல் துறை ஆணையங்கள் அமைக்கப் பட்டுள்ளன.
- ❖ இந்த ஆணையங்கள் முறையே ஆர்.ஏ. கோபால்சாமி, பி. சபாநாயகம், ஆர். பூர்ணலிங்கம் ஆகியோரின் தலைமையில் செயல்பட்டன.



## சென்னை பி.சி.ஜி தடுப்பூசி மையம் மீண்டும் திறப்பு

- 11 ஆண்டுகளுக்குப் பிறகு, சென்னையில் உள்ள பி.சி.ஜி தடுப்பூசி ஆய்வகமானது வணிகப் பயன்பாட்டிற்காக காசநோய் எதிர்ப்பு தடுப்பூசியின் பெருமளவிலான உற்பத்தியை மீண்டும் தொடங்குவதற்கு மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுள்ளது.
- சிறந்த உற்பத்தி நடைமுறை (Good Manufacturing Practices - GMP) நெறிமுறைகளைப் பின்பற்றிய பின்னர் இது மீண்டும் திறக்கப் பட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய நோய்த் தடுப்புத் திட்டத்திற்குத் தேவையான குறைந்தது 300 லட்சம் மருந்துகளை இந்த ஆய்வகம் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது.
- ஆய்வகத்தில் உள்ள விஞ்ஞானிகள் மைக்கோபாக்டீரியம் பொவிஸ் பி.சி.ஜி திரிபிலிருந்து ஒரு திரிபைப் பயன்படுத்துகின்றனர்.
- இது தனியார் நிறுவனங்களை விட மிகக் குறைந்த விலையில் காசநோய் தடுப்பூசிகளை வழங்க இருக்கின்றது.
- டென்மார்க்கின் கோபன்ஹேகனில் உள்ள ஸ்டேட்டன்ஸ் செரம் நிறுவனம் மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றின் உதவியுடன் இந்த ஆய்வகமானது 1948 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

# தேசியச் செய்திகள்

## பீஹைவ் திட்டம் - இந்திய ராணுவம்

- இராணுவத்தின் மின்னணு மற்றும் எந்திரவியல் பொறியாளர்கள் குழுவானது (Electronics and Mechanical Engineers - EME) "பீஹைவ் திட்டம்" என்ற புதிய முயற்சியைத் தொடங்கியுள்ளது.
- குறிக்கோள்: இது படைப் பிரிவின் அதிக இயந்திரமயமாக்கத்தை அடைவதையும் அதன் அனைத்துப் பட்டறைகளையும் நிகழ்நேரத் தரவுப் பகுப்பாய்வுத் திறன்களைக் கொண்ட ஒரு ஒருங்கிணைந்த சிறந்த அமைப்புடன் இணைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- WASPன் (Workshop Honeybees - ஹனிபீஸ் பட்டறை) கீழ், இராணுவப் பட்டறைகள் ஏற்கனவே தானியங்கி மயமாக்கப் பட்டுள்ளன.
- பீஹைவ் திட்டத்தின் ஒரு பகுதியாக, இந்த WASPகள் அல்லது பட்டறைகள் மையப்படுத்தப்பட்ட பீஹைவ்களாக செயல்பட இருக்கின்றன.
- இராணுவத்தின் உபகரணங்களின் நிகழ்நேரத் தரவானது (பழுதுபார்ப்பு, புதுப்பித்தல் மற்றும் மாற்றியமைத்தல்) ஒரே இடத்தில் கிடைக்கும்.
- பீஹைவ் திட்டமானது செப்டம்பர் 1 ஆம் தேதியன்று தொடங்கப்பட்டது. இது 2020 ஆம் ஆண்டு அக்டோபர் 15க்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

***EME பற்றி***

- EME என்பது இந்திய இராணுவத்தின் ஆயுத மற்றும் சேவைப் பிரிவாகும்.
- இது ஆயுத அமைப்புகள் மற்றும் உபகரணங்களின் வடிவமைப்பு, மேம்பாடு, சோதனை, ஆய்வு மற்றும் மறுசீரமைப்புக்குப் பொறுப்பாக இருக்கின்றது.
- இது பிரிட்டிஷ் ஆட்சியின் போது 1943 இல் உருவாக்கப்பட்டது. இது 2001 ஆம் ஆண்டில் அதன் தற்போதைய பெயருக்கு மறுபெயரிடப்பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## உலகப் பொருளாதார கண்ணோட்டம்

- சர்வதேச நாணய நிதியமானது (International Monetary Fund - IMF) தனது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வெளியிடப்படும் ஒரு அறிக்கையான உலகப் பொருளாதார கண்ணோட்டம் என்ற அறிக்கையை அக்டோபர் 15 அன்று வெளியிட்டுள்ளது.
- கடந்த ஆண்டில், உலக வளர்ச்சியானது கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளதாக இந்த அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது.

| | | Projections | |
|---|---|---|---|
| | 2018 | 2019 | 2020 |
| **World Output** | **3.6** | **3.0** | **3.4** |
| **Advanced Economies** | **2.3** | **1.7** | **1.7** |
| United States | 2.9 | 2.4 | 2.1 |
| Euro Area | 1.9 | 1.2 | 1.4 |
| Germany | 1.5 | 0.5 | 1.2 |
| France | 1.7 | 1.2 | 1.3 |
| Italy | 0.9 | 0.0 | 0.5 |
| Spain | 2.6 | 2.2 | 1.8 |
| Japan | 0.8 | 0.9 | 0.5 |
| United Kingdom | 1.4 | 1.2 | 1.4 |
| Canada | 1.9 | 1.5 | 1.8 |
| Other Advanced Economies | 2.6 | 1.6 | 2.0 |
| **Emerging Market and Developing Economies** | **4.5** | **3.9** | **4.6** |
| Emerging and Developing Asia | 6.4 | 5.9 | 6.0 |
| China | 6.6 | 6.1 | 5.8 |
| India | 6.8 | 6.1 | 7.0 |
| ASEAN-5 | 5.2 | 4.8 | 4.9 |
| Emerging and Developing Europe | 3.1 | 1.8 | 2.5 |
| Russia | 2.3 | 1.1 | 1.9 |
| Latin America and the Caribbean | 1.0 | 0.2 | 1.8 |
| Brazil | 1.1 | 0.9 | 2.0 |
| Mexico | 2.0 | 0.4 | 1.3 |
| Middle East and Central Asia | 1.9 | 0.9 | 2.9 |
| Saudi Arabia | 2.4 | 0.2 | 2.2 |
| Sub-Saharan Africa | 3.2 | 3.2 | 3.6 |
| Nigeria | 1.9 | 2.3 | 2.5 |
| South Africa | 0.8 | 0.7 | 1.1 |
| Low-Income Developing Countries | 5.0 | 5.0 | 5.1 |

- மேம்பட்ட பொருளாதாரங்களைப் பொறுத்தவரை, வளர்ச்சியானது 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் 1.7 சதவீத அளவில் சீராக இருக்கும் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது 6.1 சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.
- 2012 ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவின் வர்த்தக அளவானது மிகக் குறைந்த அளவை எட்டியுள்ளது என்று இந்த அறிக்கை தெரிவிக்கின்றது.
- 2012 ஆம் ஆண்டு முதல் இது 1 சதவிகிதம் குறைந்துள்ளது.
- இதற்குக் கூறப்பட்டுள்ள காரணங்கள்: பெரு நிறுவன & சுற்றுச்சூழல் ஒழுங்குமுறையில் நிச்சயமற்ற தன்மை, தேவைக் குறைவு, வங்கி சாரா நிதியியல் நிறுவனங்களின் ஆரோக்கியத் தன்மை.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நாசாவின் பெண்களுக்கான விண்வெளி உடைகள்

- சந்திரனில் நடக்க இருக்கும் முதலாவது பெண்மணி அணிவதற்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்ட இரண்டு விண்வெளி உடைகளை நாசா வெளியிட்டுள்ளது.
- ஆர்ட்டெமிஸ் திட்டத்திற்காக அடுத்தத் தலைமுறை உடைகள் வடிவமைக்கப் பட்டுள்ளன.




Guardian graphic. Source: Nasa

- ஆர்ட்டெமிஸ் திட்டமானது 2024 ஆம் ஆண்டிற்குள் முதலாவதுப் பெண்ணையும் அதற்கு அடுத்து ஒரு ஆணையும் சந்திரனில் தரையிறக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- விண்கலனுக்கு வெளியேயான ஆய்வுப் பயண அலகு (xEMU - exploration extra vehicular mobility unit) என அழைக்கப்படும் இந்த உடையானது சந்திரனின் மேற்பரப்பை, அதிலும் குறிப்பாக தென் துருவத்தை ஆராய்வதற்காக வடிவமைக்கப் பட்டுள்ளது.
- முந்தைய தலைமுறை உடைகளை விட இந்த உடையானது மிகவும் நெகிழ்வானது. இது விண்வெளி வீரர்கள் உண்மையில் சந்திரனில் இயல்பாக நடப்பதற்கு உதவுகின்றது.
- இதன் ஒரு அளவு அனைத்து விண்வெளி உடைகளுக்கும் பொருந்துகின்றது.

# விளையாட்டுச் செய்திகள்

## IAAF – திருநங்கைகளுக்கான விதி

- தோஹாவில் கூடிய சர்வதேசத் தடகள கூட்டமைப்புச் சங்கமானது (International Association of Athletics Federations - IAAF) மகளிர் பிரிவில் போட்டியிடும் திருநங்கை விளையாட்டு வீரர்களுக்குப் புதிய விதிகளை வகுத்துள்ளது.
- பெண் திருநங்கை விளையாட்டு வீரர்கள் இந்தப் புதிய விதிமுறைகளின் கீழ், தங்கள் ஆண்மைக் கிளர்வி (testosterone) அளவைப் பாதியாகக் குறைக்க வேண்டும்.
- "பெண் தடகள வீரர்" என்று ஒருவர் அறிவிக்கப்படுவதற்கு குறைந்தது 12 மாதங்களுக்கு முன்பு ஆண்மைக் கிளர்வியின் செறிவானது ஒரு லிட்டருக்கு ஐந்து நானோமோல்களுக்குக் குறைவாக இருக்க வேண்டும்.
- மேலும், ஒரு திருநங்கை விளையாட்டு வீரர் சட்டத்தால் "பெண்" என்று அங்கீகரிக்கப் பட வேண்டிய அவசியமில்லை.
- அவரது பாலின அடையாளம் "பெண்" என்று கையொப்பமிடப்பட்ட ஒரு அறிவிப்பே போதுமானதாகும்.
- பாலியல் வளர்ச்சி அல்லது ஹைபராண்ட்ரோஜனிசத்தின் வேறுபாடுகள் கொண்ட விளையாட்டு வீரர்களுக்கும் இதே போன்ற விதிகள் பொருந்தும்.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச கிராமப்புற பெண்கள் தினம் - அக்டோபர் 15

- சர்வதேச கிராமப்புற பெண்கள் தினம் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 15 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகின்றது.
- அக்டோபர் 15, 2008 அன்று கிராமப்புற பெண்களின் முதலாவது சர்வதேச தினம் அனுசரிக்கப்பட்டது.
- விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சியை மேம்படுத்துவதில், உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதில் மற்றும் கிராமப்புற வறுமையை ஒழிப்பதில் பழங்குடிப் பெண்கள் உட்பட கிராமப்புற பெண்களின் முக்கிய பங்கு மற்றும் பங்களிப்பை இந்த நாள் அங்கீகரிக்கிறது.
- இந்த ஆண்டுக் கொண்டாட்டத்தின் கருப்பொருள் "கிராமப்புற பெண்கள் மற்றும் சிறுமிகள் காலநிலை எதிர்ப்புத் தன்மையைக் கட்டமைத்தல்" என்பதாகும்.
- இந்தத் தினமானது காலநிலை நெருக்கடியை எதிர்கொள்ள எதிர்ப்புத் தன்மையை உருவாக்குவதில் கிராமப்புற பெண்கள் மற்றும் சிறுமிகள் வகிக்கும் முக்கியப் பங்கை எடுத்துக் காட்டுகின்றது.



## உலகளாவிய கை கழுவுதல் தினம் - அக்டோபர் 15

- ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 15 ஆம் தேதி அன்று உலகளாவிய கை கழுவுதல் தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- நோய்த் தடுப்புக்கு முக்கிய காரணியாக விளங்கும் ஒரு செயலான சோப்பினைப் பயன்படுத்திக் கை கழுவுதல் என்ற செயல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு சர்வதேச கை கழுவுதல் ஊக்குவிப்புப் பிரச்சாரம் இந்த நாள் ஆகும்.
- கை கழுவுதல் என்ற செயலானது சுவாச மற்றும் குடல் நோய்களை 25-50% என்ற அளவில் குறைக்கின்றது.
- 2008 ஆம் ஆண்டில் ஐ.நா பொதுச் சபையானது இத்தகைய நாளை அனுசரிப்பதற்கு ஒப்புதல் அளித்தது.

## உலக உணவு தினம் - அக்டோபர் 16

- உலக உணவு தினம் (World Food Day - WFD) என்பது ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 16 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படும் ஒரு சர்வதேச நாள் ஆகும்.
- இந்த நாளானது 1945 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (Food and Agriculture Organization - FAO) நிறுவப்பட்ட தினத்தை முன்னிட்டு கொண்டாடப் படுகின்றது.
- 1979 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் FAO அமைப்பின் 20வது பொது மாநாட்டில் FAO இன் உறுப்பு நாடுகளால் WFD நிறுவப்பட்டது.
- இந்த விழிப்புணர்வு நாளானது ஆரோக்கியமான மற்றும் நிலையான உணவுகளை மலிவு விலையில் மற்றும் அனைவருக்கும் அணுகக் கூடியதாக மாற்றுவதற்குப் பல துறைகளில் நடவடிக்கை எடுக்க வலியுறுத்துகிறது.
- 2019 ஆம் ஆண்டின் இத்தினத்திற்கான கருப்பொருள் "எங்கள் செயல்கள் எங்கள் எதிர்காலம், ஒரு #ஜீரோஹங்கர் (#சுழியப் பட்டினி) உலகத்திற்கான ஆரோக்கியமான உணவுகள்" என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★